

# இஸ்லாம் மித்திரன்.

# Islam Mittiran.

"லாஇலாஹ இல்லல்லாஃ
முஹம்மதுறஸூலுல்லாஃ"

புத். 1. { அறப் ஹிஸ 1311 துல்கஉதா மீ 15௳ ஞா.கி. / இங்கிலீஷ் ஹிஸ 1894 மேய் மீ 20௳ ஞா.கி. } இல. 7.

## நான்கு இமாம்கள் சரித்திர சூசனம்.

[சென்ற 5 மிலக்கப் பத்திரிகைத் தொடர்ச்சி.]

இமாமுல் அஉளம் அபூஹனீபா றஹ்மஹுல்லாஃ அவர்கள் இஸ்லாம் மார்க்கத்தையும் அதன் வேதநூலொழுங்குப் பிரகாரமாக தரும நூல் சட்டத்தையும் எவவளவோ பிரயாசப்பட்டுண்டாக்கியதுமாத்திரமல்ல, நூதனக்கொள்கையுடைய விபரீத வகுப்பினரின் அர்த்தப்பிசகான வார்த்தைகளையும் வழக்கங்களையும் கண்டித்து சன்மார்க்க ஒழுங்காய் மார்க்கத்தை நிலைப் படுத்தினார்கள். ஆனது பற்றி, அபூஹனீபா நாயகம் அவர்களுக்காக முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் அவர் அவர்களின் தொழுகையின் பிறகு பிரார்த்தனை செய்ய வேண்டியது ஆவசியகமாம் என்று "தஹ்தீபுல்கமால்" என்கிற கித்தாபில் கூறப்படுகின்றது

நான் அனேகமான சமய சாத்திரங்களையும் வேதாகம பண்டிதர்களையுங் கண்டிருக்கிறேன், ஆனால்; இமாம் அபூஹனீபா றஹ்மஹுல்லாஃவைப்போல விவேகத்தாலும், யூகபுத்தியாலும், நுணுக்கத்தாலும், வருசையாலும் மேன்பாடுடையவரை

நான் காணவில்லை என்று எஸிதிப்னு ஹாறூன் றஹ்மஹுல்லாஃ கூறினார்களென்று யஹ்யப்னு நஸ்று றஹ்மஹுல்லாஃ சொல்லியிருக்கிறார்கள்.

இமாம் சுப்யானு றஹ்மஹுல்லாஃ என்றொரு வித்வ சிரோமணியிருந்தார்கள், அவர்களுக்கு நபிகள் நாயகந் திருவாய் மலர்ந்தருளிய அனேக ஹதீது வாக்கியங்கள் மனப்பாடமிருந்தன, ஆதலால் அவர்களையும் இமாம் அவர்களையும் குறித்து எஸிதிப்னு ஹாறூன் றஹ்மஹுல்லாஃ விடங் கேட்டபோது, சுப்யானைப்போல நூறுபேர்களுடைய சொல்லைக்காண அபூஹனீபா றஹ்மஹுல்லாஃவுடைய சொல்லாகிறது எனக்கு வப்பாகும் சுப்யான் ஹதீதையுடையவர், அபூஹனீபாவாகிறவர்கள் பிக்ஹு உடையவர்கள் என்று கூறினார்கள்.

இமாம் அபூஹனீபாவையும், சுப்யானு தவ்ரீயையும் அல்லாஹுதஆலா எனக்குதவி தராதிருந்தானேயானால், நானும் ஏனைய சமானிய சனங்களைப்போல மடையனாய்ப் போவேனென்று அப்துல்லாஃ இப்னுல்முபாறக் றஹ்மஹுல்லாஃ கூறியிருக்கின்றார்கள்.

நான் மனிதர்களில் மிகுந்த வணக்கமுடையவர்களையும், புத்தி கூர்மையுடையவர்களையும், கல்வி அறிவுடையவர்களையும், மார்க்க தரும நீதிச்சட்டமுடையவர்களையுங் கண்டிருக்கிறேன், அவர்களில் மிகுந்த வணக்கமுடையவர் அப்துல் அஸீஸ் இப்னு அபாதாவூது, புத்தி கூர்மையுடையவர் புழைலுப்னு இயாளு, கல்வி அறிவுடையவர் சுப்யானு தவ்ரீ, மார்க்க தரும நீதிச்சட்டமுடையவர் அபூஹனீபா (றளியல்லாஹு அன்ஹும்) என்று முஹம்மதிப்னு மஸாஹிம் என்பவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

இமாம் அபூஹனீபா றஹ்மஹுல்லாஃ அவர்களுடைய விஷயத்தில் பற்பல மகத்தான அறபுப் பண்டிதோத்தமர்களும் வித்வான்களும் புகழ்படைத்துக் கூறியிருக்கின்றார்களன்றியும், புலமைத் திறமையுடைய கவி ராயர்களும் நாவலர்களும் கவிகளாலும், பாக்களாலும் போற்றிப் புகழ்ந்திருக்கின்றார்கள். அவைகளைத் தமிழில் மொழிபெயர்த்துக்கூறுவதற்கு இங்கே இடம் பெறாதாயினும், ஒரு கவியின் மொழி பெயர்ப்பை மாத்திரங் கூறுவோம்:—

“எந்த நாளும் வருசையையும் நலவையும் வர்த்திசெய்து நேர் வார்த்தையைத் தெரிந்துகொள்கின்றவர்களாய் நான் மேன்மையாகிய இமாமைக் கண்டேன், நவீனக் கொள்கையாளராகிய அநியாயக் காரர்கள் நியாயப் பிழையானவைகளைச் சொல்லும் நேரம் அவர்களின் மனக்கிடக்கையிற் பொதிந்த இரத்தினாபரணாதிகள் எல்லாம் வெளிக்கிடும் அவைகளில் அதிஜயமான நீதங்களுண்டு. இமாமுக்குயாரைத்தான் உதாரணிக்குவீர். சர்க்குருவாகிய ஹம்மாது றஹ்மஹுல்லாஃவை நாம் இழந்த வியசனத்தை மாற்றினார்கள். கெட்ட வம்பர்களுடைய விச்சித்திர வார்த்தைகள் யாவையும் தட்டிவிட்டார்” - என்பதுவே.

இமாம் அவர்களைப் புகழ்ந்து பல வித்துவான்களாலும் பாடிய பாக்களின் சங்கதிகள் அங்ஙனங்கிடக்க, இமாம் அவர்கள் சிற்சில சந்தர்ப்பங்களிற்

சொல்லிய கவிமுதலியவற்றைக் குறித்துப் பேசுவோம்.

இமாம் அவர்களுடைய காலத்தில் ஒரு அரசர் இருந்தார். இமாம் அவர்கள் ஓர் விசேஷ விஷயத்திற்காக அந்த அரசனுடைய அரன்மனை வாசலில் போய் நிற்கும்போது மேழதாள தம்பூறு வீணை முதலிய வாத்தியக் கருவிகளுடன் சில நட்டுவச் சிறுவர்கள் சகிதராக ஒருவன் வெளிக்கிட்டான், அப்போது இமாம் அவர்கள் அங்கே நின்ற சேவகர்களிடம் இவன் யாரென்று கேட்கவே, இவன்தான் இராஜாவுடைய விகடன் என்றுசொன்னார்கள். இதைக்கேட்டவுடனே இமாம் அவர்கள் இரண்டு கண்களாலும் தாரை தாரையாய் ஜலம் வடியும்படியா யழுத்வர்களாய் ஓர் கவி சொன்னார்கள். அந்தக்கவியின் அர்த்தமாவது:—

கல்வி அறிவையுடையவர்கள் மனிதர்களுக்கிடையில் பழுதானவர்களாயும் உரோச மிழந்தவர்களாயு மிருப்பதைக்கண்டு சகிக்கா நின்ற சவிப்பே சகல சவிப்புகளுக்கும் போதியதாயிருக்கின்றன, இன்னும் ராஜாக்களண்டையில் இராக சங்கீதம் பாடி விகட வேடிக்கை செய்கிறவனே அல்லாது மற்றையவர்கவர்கள் பிரயோசன மடையாதிருப்பதூஉம் போதியதாயிருக்கின்றது. அவர்களின் மேழ வாத்தியங்கள் அதகின் ஏதனத்துடன் பரிபாரமாக்கப் பட்டதா யிருக்க, அவர்களுடைய தானங்கள் பாழான கடான நிலைபரத்திலாகி விட்டது, அவர்களுடைய கருத்துகளே அவர்களுக்கு உபதேசமாகிவிட்டது. நானும் அவர்களிற் சேர்ந்து கூத்தாடியாக வேண்டிற்றே! நான் சேர்த்துக் கொண்ட கல்வியைக் கொண்டு நான் தோசியாகா திருக்க வேண்டிற்றே! என்றும்.

இன்னும் வரும்.

---

# இமாம் அபுல்ஹஸன் சாதுலி றஹ்மதுல்லாஹ் அவர்கள் சரித்திரம்.

[சென்ற 6 மிலக்கப் பத்திரிகைத் தொடர்ச்சி.]

குத்பு நாயகம் சாதுலி றஹ்மதுல்லாஹ் அவர்கள் இறாக்கு தேசத்திற்குப் போன பொழுது அங்குள்ள கனம்பொருந்திய மகாத்துமாவாகிய வாஸித்தீ றஹ்மதுல்லாஹ் அவர்களிடம் தாங்கள் தீட்சை பெறும் பொருட்டு மனதிற் கருதிக்கொண்டு தர்க்காலத்திற்கு குத்பு என்னும் பட்டம் பெற்றவர்கள் யாரென்று வினவியதர்க்கு, உங்கள் தேசமாகிய மகுறிபுப்பகுதிக்குப் போருங்கள், அங்கே அப்துஸ்ஸலாம் இப்னுமசீசு என்னும் பேர் நாமம் தங்கிய வோர் குத்பு இருக்கின்றார்கள் என்று பிரத்தியுத்தரங் கூறினார்கள். அவர்கள் கூறிய உத்தரத்தை மனதில் பதிந்து கொண்டு அவ்விடத்தால் புறப்பட்டு மகுறிபு தேசத்திற்கு வந்தார்கள்.

செய்யிதுனா அபுல்ஹஸன் சாதுலி றஹ்மதுல்லாஹ் அவர்கள் கூறுவதாவது, நான் தீட்சை பெறும் நோக்கமாக மெய்ஞ்ஞான சற்குருவைத் தேடி என்தேசமாகிய மகுறிபு இராச்

சியத்திற்கு வந்து, அபூ மூஹம்மது என்னும் பெயர் நாமத்தையுடைய அப்துஸ்ஸலாம் இப்னு மசீசு றளியல்லாஹு அன்ஹு அவர்களைக் காணும்படி தேடிச் சென்றேன், அவர்கள் மகுறிபு தேசத்தில் ஓர் பாரிய பருவதச் சிகரத்தின்மேல், உண்டாயிருக்கின்றகுகையில் ஓர் கட்டடங்கட்டிக்கொண்டு அதிலே வாசஞ் செய்தார்கள். அதை நான் அறிந்து அங்கு சமீபத்தில் போகிறதற்கு முன்னர், அந்த மலையடிவாரத்திற் சொலித்தோடும் நீரருவியில் (என்னுடைய அறிவு வணக்கம் யாவையுங் கழுகிவிடுகிறேன் என்கிற நாட்டங் கொண்டு) குளித்து ஸ்நானஞ் செய்துவிட்டு எனக்குடைய யாவையும் இழந்த தரித்திரனைப்போல அவர்கள் சமுகத்திற்குப் போனேன். அப்போது அவர்கள் என்னிடத்திற்கு வரும்படி இறங்கும் ஸ்திதியிற் கண்டவுடனே கிட்டே மூடுகிச் சந்தித்தேன். அப்போது அவர்கள் அப்துல் ஜப்பாருடைய குமாரன் அப்துல்லாஹ், அப்துல்லாஹ் வுடைய குமாரன் அலி என்பவருக்கே சோபனம் சோபனம் என்று துதி கூறினார்கள் அன்றியும் என்னுடையவமிஷத் தலைமுறையை றசூலுல்லாஹ் அவர்களைச் சாரும்வரையில், எனக்கு எடுத்துரைத்தார்கள். பின்னர் எனது சர்க்குரு நாயகம் அவர்கள் என்னை விழித்து அலியே! நீர் எம்மிடம் வரும்போது கல்வியையும் வணக்கத்தையுமிழந்த தரித்திரனாகவந்து இகபர இருலோக பாக்கியங்களையும் எம்மிலிருந்து மெடுத்துக்கொண்டீர் என்று சொல்லவே, நான் மிகவும் ஆச்சரியமுற்றேன், ஏனெனில் இதற்குமுன் ஒருக்காலும் எங்களுடன் சினேகிதம்பாராட்டி எங்கள் வம்மிஷ சங்கதிகளை யறியாதவர்களாயிருந்தும் யாதொரு பிசகின்றி உள்ளபடியாய் எங்கள் தலைமுறையைக் கூறினமை பற்றியும், நான் வரும்போது நாடிக்கொண்டு ஸ்நானஞ் செய்துவந்த நாட்டத்தையறிந்து கூறினமை பற்றியுமே. இந்த நாயகம் அவர்கள் மெய்ஞ்ஞான திருஷ்டியால் அறிந்த சங்கதிகள் என்னை ஆச்சரியப் படுத்தியதுமன்றி, என் மனசையும் அவர்களின் அற்புதத்திலே ஆழ்த்தி அன்பைப் பெருக்கியது. அதன் பிறகு பரமரகசிய ஞானார்ப்புதாதிசயங்களை நான் கண்டறியும் வரையில் சில நாட்களாக அவர்களண்டையிற் றரிப்பட்டிருந்தேன் அனேக பரமரகசிய ஞானார்ப்புதங்களை அவர்களிடங் கண்டுகொண்டேன் என்று நாயகம் அபுல்ஹஸன் சாதுலி றஹமஹுல்லாஹ் அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

சர்க்குரு நாயகராகிய அபூ அப்துல்லாஹ் வென்றழைக்கப்படும் ஸெய்யிது அப்துஸ்ஸலாம் இப்னு மசீசு றஹமஹுல்லாஹ் வாகிறவர்கள் அபுல் ஹஸன் சாதுலி றஹமஹுல்லாஹ் அவர்களின் குருமார்கள் யாவரினும் சிரேட்டமானவர்கள். இந்த நாயகம் அவர்களிடத்திற் றீட்சை பெற்றதின் பிறகு தான் குத்பு நாயகமாகிய அபுல்ஹஸன் றஹமஹுல்லாஹ்

அவர்களுக்கு ஞான வழி திறபிடியான்று, குத்பு நாயகம் அவர்களிடம் அவர்களினது தீட்சைக்குரு யாரெனக் கேட்டால், அப்துஸ்ஸலாம் றளியல்லாஹு அன்ஹு அவர்கள் தானென்றும், தங்களின் சேர்மானமும் தீட்சை வழியின் சேர்மானமு முண்டாயிருக்கின்றன வென்று பகர்வார்கள் என்று "மபாகிர்" என்னுங் கித்தாபில் சொல்லப்படுகிறது.

இன்னும் வரும்.

## துஹ்பத்துல்கிராம்.

[சென்ற 6 மிலக்கப் பத்திரிகைத் தொடர்ச்சி.]

அல்லாஹுத்தஆலாவுக்காக உகந்து, அல்லாஹுத்தஆலாவுக்காக கோபித்து, அல்லாஹுத்தஆலாவுக்காக கொடுத்து, அல்லாஹுத்தஆலாவுக்காக விலகினேனேயானால், இட்டமாக அவனுடைய விசுவாசம் பூரணமாகி விடுமென்றும், இதோ சொல்லப்பட்ட லட்சணம் அமையப் பெற்றவன் அல்லாஹுத்தஆலாவை ஒருமைப் படுத்துகிறவனாவானென்றும் நபிகள் திருவாக்கிய ஹதீது வருகின்றது. அல்லாஹுத்தஆலா ஏவப்பட்டதை யெடுக்காமலும் விலக்கப்பட்டதை தடுக்காமலும், (உலமா) பண்டிதர்களையும் அவர்களால் உண்டாக்கப்பட்ட கிரந்தங்களையும் விருதாவாய் தூஷிக்கிறதும், (உலமா) பண்டிதர்களின் முகதாவில் தலைசாய்த்துச் சாட்டாங்கஞ் செய்தும், அவர்களைக் காணவிடத்துப் பலவாறு தூஷணித்திகழ்ந்தும் திரியாநின்ற நடக்கையுடையவர்கள் சந்தேகமின்றி உண்மை விசுவாசிகளல்லர்.

எவனொருவன் வழி கெட்டுப்போகாதிருக்கவேண்டுமென்று நாவொனுகில் ஒரு நிமைகொட்டி விழிக்கின்ற நேரமாவது சரீஆவென்னும் மார்க்கச் சரிகை கிரியையாகிய துலாவை வெறிந்திடாமல் முன்னோர்களாகிய மார்க்க ஆராய்வையுடைய நிபுணர்களும் அவர்களைப் பின்பற்றியவர்களும் நின்ற நிலைபெயராது நிற்கவேண்டுமென்று செய்கு முஹியித்தீன் இப்னு அறபீறளியல்லாஹு அன்ஹு திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றார்கள்.

இஸ்லாம் மித்திரரே! "துஹ்பத்துல்கிறாம்" என்னும் கித்தாபில் நபிகள் நாயகம் திருவாய் மலர்ந்தருளிய "நான் இன்ன விதமாக நாயனைக் கண்டேன்" என்ற ஹதீதை யெழுதியது குற்றமென்று பத்வாத் தேடி அந்த ஆலிம்சாஹிபு அவர்களையும், அந்த கித்தாபையும் குற்றமாய்ப்பேசியவர்கள், காதிரியர்தரீக்கின் ஒரு பிரிவுக்குக் குருவாகவும் ஆலிம் என்னும் பண்டிதராகவுமிருக்கின்ற கீழக்கரை மஹா-ள-ள-ஸ்ரீ ஸெய்யிது முஹம்மது ஆலிம் என்னும் மாப்பிள்ளை ஆலிம் சாஹிபு அவர்களா லியற்றப்பட்ட "மகானி" என்னுங் கித்தாபில் 37 ம் பக்கத்தில் நபிகள் நாயகம் கண்ட விதத்தைப்பற்றிய ஹதீதைக்கூறி

யிருக்கின்றார்களே இதற் கென்ன சொல்லுவீர்கள்? அவர்களையும் அக்கித்தாபையுங் குற்றமாய்ப் பேசுவீர்களோ? அல்லது அவர்களையும் ஊரைவிட்டும் ஓட்டும்படி பத்வாத் தேடுவீர்களோ? எமது அருமை மித்திரர்களே! தெளிவாகிய உங்கள் விவேக புத்தியைக்கொண்டு நோட்டமிட்டுப் பாருங்கள். மடத்தனத்தையுடையவர்கள் விசுவாசங்கொண்ட மூட விசுவாசத்தைவிட்டுநீங்கி ஒற்றுமையென்னும் பிடிகயற்றைப்பற்றிப்பிடியுங்கள். அறபு வார்த்தையாற் சொன்னால் பரம ரகசியமென்றும் தமிழால் மொழிபெயர்த்துச்சொன்னால் பாதக விஷயமென்றும் எண்ணுகின்ற மூட பக்தியென்னும் மடமையாகிய பழைய உக்கிய போர்வையைக் கிழித்தெறியுங்கள். பழைய வைராக்கியமாகிய பொறாமை யென்னும் பாகையைக் களட்டி விடுங்கள். மித்திரரே! உங்களுடைய குற்றங்களை உங்களுக்குக்காட்டி உங்களுக்கறிவு சொல்லி உங்களைத் திருத்தி நேர்வழியிலாக்கக்கூடிய வோர் நிறைந்தவித்வத் திறமையுடைய குருவைத் தேடிக்கொள்ளுங்கள். அப்படிப்பட்ட குருவைப்பின்பற்றி நடந்தீர்களானால் உங்களுக்கு இந்த இக்கட்டுகள் அறுகமாட்டாது.

இன்னும் வரும்.

## "தலாயிலுல்புளலா"

துற்பத்துல்கிறும் என்னும் கித்தாபில் கனம்பொருந்திய நூஹு இப்னு அப்துல் காதர் ஆலிம் சாஹிபு அவர்கள் ஓர் ரகசியத்தை வெளிப்படுத்தி விட்டார்களென்றும் பொதுஜனர்களுக்குப் பார்க்கக்கூடாத கித்தாபுகளின் சொற்களை வெளிப்படுத்தி விட்டார்களென்றும் வெறுதாவில் பாடுபட்டு அந்த ஆலிம் சாஹிபு அவர்களின்பேரில் வீண் பழி சுமத்தும் மடையர்களின் வார்த்தைகளைக் கண்டித்து தக்க அத்தாட்சிகளுடன் அஹுக்காமம்வாழும், ஹாமிது இப்னு அப்துர் ரஹ்மான் ஆலிம் சாஹிபு என்பவர்களால் "தலாயிலுல் புளலா பீறத்தி அக்வாலில் ஜுஹலா" என்று பெயர் கொடுக்கப்பட்ட வோர் கண்டன மியற்றப்பட் டிருக்கிறது. அதன் பிரதி ஒன்று எமக்கனுப்பிய தயவுக்காக வந்தனங் கூறுகின்றோம். இந்தச் சிறிய கித்தாபு அறபுத்தமிழில் மிக்க பிரயோசனப் படத்தக்கதா யியற்றப்பட்டிருக்கிறது. அறபுத்தமிழ் அறியாதவர்கள் அறியும் பொருட்டு நாமும் எங்கள் பத்திரிகையில் அதிலிருந்துஞ் சில சங்கதிகளை "துஹ்பத்துல்கிறும்" என்னு முகவுரைச் சங்கதியின்கீழ் இனிமேல் எழுதிவருவோம்.

## ஆண் பெண் நிலைமை.

கல்வி யென்பது நீதி நெறி விளக்கத்தில் சிலபாட்டுகளும், நன்னூலில் சில சூத்திரங்களுங் கற்பிப்பது மாத்திரமேயல்ல. மாறுபாடாயுஞ் செவ்வையற்றதாயு மிருக்குங்குணத்தைச்

செம்மைப் படுத்துவதற்கு நல்ல பாஷையொன்றேற்படுத்தி அதில், பிள்ளைகளைச் செலுத்தும்படியாய் முயல்வதற்குமே கல்வி யென்று பெயர். கல்வி பயிற்றிவைப்பதில் பெண்பிள்ளைகளும், ஆண்பிள்ளைகளும், பாடங்கள் ஒன்றாயிருந்தபோதிலும் கற்றுக்கொடுக்குந் தன்மை வெவ்வேறா யிருக்கவேண்டும். பாஷையின் நுணுக்கங்களையும், உலகத்தில் எவ்விதமாய் நடந்தால் தங்கள் சுகத்திற்கும், புகழுக்கும் தக்கபடியா யிருக்குமோ, அப்படிப்பட்ட ஒழுக்கத்தையும், அதற்குரிய விவகாரத்தையும் அறிவிக்கத்தக்க நூல்களைப் பெண்களுக்குக் கற்பிக்க வேண்டும்.

மனதுக்கு ஆதாரமாகிய மூளையானது சிறுவயதுள்ள பெண்களுக்கு அதே வயதுள்ள ஆண்பிள்ளைகளைப் பார்க்கிலும், அதி தீவிரமாய் விர்த்தியாகிறதென்றும், அவ்விர்த்தியானது கொஞ்சக்கால மட்டுமே யென்றும் அறிவுடையோர் பலரும் யூகிக்கின்றனர்.

6-வயதுமுதல், 13-வயதுவரைக்கும் சிறுமிகள், சிறுவர்களைப்பார்க்கிலும் பாடங்களைப் படிக்கிறதிலும் ஞாபகசக்தியிலும், உபாத்தியார் சொல்லுவதைக் கிரகிக்குந்தன்மையிலும், மேற்சொல்லிய காரணத்தால், அதிகக் கூர்மையுடையவர்களாயிருக்கக்காண்கிறோம். கல்வி தொடங்கிய வுடன் இவ்வளவு கூர்மையோடு வாசிக்கும் பெண்பிள்ளைகள் பின்னிட்டு மதநிதி சாஸ்திர முதலிய பல சாஸ்திரங்களை பயிற்றிவைக்குங் காலங்களில், அவ்வளவு தீவிரமாய்ப் படிக்கப் பருவபேதத்தால் சாத்தியப்படாமல், ஆண் சிறுவர்களுக்குப் பின்னடைகின்றனர். "பேதைமை யென்பது மாதர்க் கணிகலம்" யாவருக்கும் "மடங்கொன்றறிவகற்றுங் கல்வி" யாதலால், பெண்களுக்குக் கல்வி அவசியம் பயிற்றுவிக்கவேண்டுவது புத்திமான்களது பட்சமிதுவே.

12-வயது முதல் 15 வயதுவரையுமுள்ளகாலம் மிகுந்தமுக்கியமானது. இக்காலத்தில் பெண்கள் தங்களை அடக்கவேண்டுமென்றதில் பிரியமுடையவர்களாய்த் தனித்திருக்கவும், தங்கள் கருத்தை வெளிப்படுத்தாதிருக்கவும் விரும்புகின்றனர். சிறுவனுக்கோ சரீர பலம், பராக்கிரமம், மனோதைரியம், அறிவு முதலியன வளரும். மனதுக்கும் தேகத்துக்கும் மிகுந்த ஐக்கியமுண்டென்பது யாவருக்குந்தெரிந்த விஷயமே. மனதில் உண்டாகும் வேற்றுமைக் கேற்பத்தேகத்திலும் வேற்றுமையான குறிகள் இந்தக்காலத்தில் தோன்றும். இப்பருவம் தருணப் பருவத்திற்கு சமீபித்திருப்பதால் முக்கியமானதென்று யாவரும் கவனிக்கின்றனர். கல்வியின் பயனாகிய இருத்தங்களை விளைவிப்பதற்கு இதுவே தருணம். மனதிற்கு யாதொரு கலக்கத்தைக் கொடாமல் மிகுந்த சாந்தமாய் அதைச் செம்மைப்படுத்த விடா முயற்சியாய் முயல்வதே கல்வியின் பயன். காலஞ்செல்ல இம்மத்திம பருவங் கழிந்து வாலிபர்களுக்கும், சிறுமிகளுக்குத் தங்

கள் தங்களுக்குரிய குணங்கள் விர்த்தியாகின்றன.

பதினாறாவது வயது கழிந்தபின்பு, வாலிபனிடத்தில், தர்க்கிக்கும்படியான யுக்தியும் மிகுந்த ஆழமாய், யோசிக்குந்தன்மையும், ஞாய மின்னதென்று விபகாரங்கள் மூலமாய்க் கண்டுபிடிக்குஞ் சக்தியுந் தோன்ற ஆரம்பிக்கும். பெண்களிடத்திலோவென்றால், மிகுந்த கூர்மையான புத்தியும் பிறருடைய சித்தத்தை ஒரு கணத்தில் அறியத்தக்க சக்தியும், கபடசித்தமும் விளையும் கூர்மையான அறிவுடைய பெண்களுக்கு அதோடு கூட கோழைத்தன்மையுமுண்டு. பெண்களுக்குத் துன்பம் வருங்கால், மிகுந்த கலக்க மடைந்து, தைரியமற்றவர்களாய்க் கூக்குரலிட்டுப் புலம்புவார்கள். வேறு பெண்களாவது, ஆண் மக்களாவது துன்பத்தால் கலங்குவதைப் பார்க்கும்போதும், துக்கங்களைப்பற்றிக் கேள்விப்படும் போதும், மிகுந்த வருத்தமடைந்து தாங்களும் வருந்துகிறதுண்டு, சாதாரணமாய்ப் பெண்களிடத்தில் பிடிவாத மென்னுங்குணம் விசேஷமா யுண்டென்பது எல்லாருக்குந் தெரிந்த விஷயமே. மனதில் ஓர் தீர்மானத்தைப் பண்ணிக்கொள்ளும் போதே அதற் கேற்ற ஞாயங்களைச் சேகரியாதது பெண்ணுக்குரிய குணம்., ஆகையாற்றான், ஞாயமின்னதென்று சரியாகக்கண்டுபிடிக்கப் பெண்கள் தகுந்தவர்களல்லவென்பது அறிவுடையோர் கருத்து. துன்பம் வருங்கால் மனோ தைரியத்தோடு பொறுத்துக் கொள்வதற்கும் பல காரியங்களிலும், ஆண் மக்கள் தனது உற்சாகம், வீரிய முதலிய குணங்களைச் செலுத்துவதற்குமே ஆண்மைத்தனமென்று பெயர். இக்குணங்கள் ஓர் பெண்ணிடத்திலிருந்தால், அவள் விசேஷமாய் எண்ணப்படுவாள். அவளை ஆண்மைத்தன முள்ள பெண்ணென்று கூறுவார். இக்குணங்கள் ஆண்மக்களிடத்தி லில்லையானால் அவனைப் பேடியென்று பெயரிட்டுப் பலரும் நிந்தை செய்வர்.

---

## நீதிமொழிகள்.

உன்னிலுள்ள குறைகளைக் கவனியாமல் பிறர் குறைகளைக் கூறாதிரு.

நீ வறியவனாயிருக்கிறாயென்று கவலைப்படாது, உன்னிலுந்தாழ்ந்த நிலைமையுடைய வறியவரைப் பார்த்து உன் கவலையைத் தொலை.

நீ செல்வனாயிருக்கிறாயென்று அகந்தை கொள்ளாது, உன்னிலும் மேன்பட்ட செல்வரை நினைத்து அவ்வகந்தையை விடு.

உன்னைப்போல பிறனையும் நேசி. பிறன் தாரத்தை உன் சகோதரி யென்று நினை. கெட்டவர்களின் சினேகிதத்தை நஞ்சென்று நினை. யாருடனும் உண்மையைப்பேசி உன் நாவைக்காப்பாற்று. நீ என்ன செய்தாலும் உன் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமலே செய்.

மரணத்தை ஒருக்காலும் மறவாதே, அப்போது ஜெயமடைவாய்.